# SG Digital

## கூகல் Translate பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் இணையத்தொடர்பு இல்லாமலேயே மொழிகளை மொழிபெயர்க்கலாம். நீங்கள் “**translate offline**” என்பதைப் பார்க்கும்போது அதில் குறியிட்டால் போதும்.

## படிநிலை 1 — கூகல் Translate செயலியை உங்கள் கைப்பேசியில் பதிவிறக்கம் செய்யுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு** அல்லது **கூகல் பிளே ஸ்டோருக்குச்** சென்று, **கூகல் Translate செயலியைப்** பதிவிறக்கம் செய்து, செயல்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், ‘**Get**’ மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
2. அண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், ‘**Install**’ மீது தட்டி செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.

## படிநிலை 2A — எழுதும் அல்லது தட்டச்சு செய்யும் இயக்கத்தைப் பயன்படுத்துங்கள்









3. மொழிபெயர்க்க விரும்பும் மொழியையும் மொழிபெயர்க்கப்படும் மொழியையும் தேர்ந்தெடுங்கள். பிறகு “**Finish**” மீது தட்டுங்கள்.
4. நீங்கள் சொல்ல விரும்பும் சொற்றொடரை அல்லது வார்த்தைகளை உள்ளிடுங்கள் அல்லது எழுதும் இயக்கத்தைப் பயன்படுத்த (Handwriting) மீது தட்டுங்கள்.
5. கையால் எழுதும் இயக்கத்தைப் பயன்படுத்துவதாக இருந்தால், திரையின் கீழ் பாதியில் காலியாக இருக்கும் கட்டத்திற்குள் நீங்கள் மொழிபெயர்க்க விரும்பும் சொல்லை எழுதுங்கள்.
6. சொற்றொடர் தானாக மொழிபெயர்க்கப்படும். எ.கா. “hello” எனத் தட்டச்சு செய்து, தொடர்வதற்கு “你好” மீது தட்டுங்கள்.

## படிநிலை 2B — கேமரா இயக்கத்தைப் பயன்படுத்தும் வழிமுறை









7. நீங்கள் (Camera) மீது தட்டி, கேமரா இயக்கத்தைப் பயன்படுத்த அனுமதி அளிக்கலாம்.
8. கேமரா இயக்கத்தைப் பயன்படுத்தும்போது, வழக்கமாக “**Instant**” அம்சத்துடன் தொடங்குவீர்கள். உங்கள் கைப்பேசியின் கேமராவை வாசகத்தின்மீது காட்டி உடனடியாக மொழிபெயர்க்கலாம்.
9. இறக்குமதி இயக்கத்தைப் பயன்படுத்த (Import) மீது தட்டுங்கள். இதைப் பயன்படுத்தி, உங்கள் கைப்பேசியில் உள்ள படங்களைத் தேர்ந்தெடுத்து மொழிபெயர்க்கலாம்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள்

- உங்கள் சாதனங்களையும் செயலிகளையும் எப்போதும் **புதுப்பித்து**, அறியப்பட்ட பாதுகாப்பு பலவீனங்களிலிருந்து அவற்றைப் பாதுகாத்திடுங்கள்.
- நீங்கள் பாதுகாக்கப்பட்ட அல்லது பாதுகாக்கப்படாத இணையக் கட்டமைப்பைப் பயன்படுத்தினாலும், தனிப்பட்ட விவரங்கள் அல்லது வேறு முக்கிய தகவல்கள் கொண்ட அதிமுக்கிய உள்ளடக்கங்களை மொழிபெயர்ப்பதற்கு கூகல் Translate செயலியை **ஒருபோதும்** பயன்படுத்தக்கூடாது. வாசகத்தை செயலியில் உள்ளிட்டவுடன், அது கூகலின் உடைமையாகிவிடும், கூகல் தன் விருப்பப்படி வாசகத்திலுள்ள விவரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

SG:DIGITAL
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY